<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 150/2012

Deposition of Witness : DW–1

Name : குமரேசன்

Father's Name /W/o : த/பெ. கோபால்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 07.11.2024.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி தரப்பில்**</u>

1. எனது முதன்மை சாட்சியம் தாக்கல் செய்யபோது எனது வயது 49 என்று தெரிவித்துள்ளேன் என்றால் நான் அதுபோல் தெரிவிக்கவில்லை தற்போது எனக்கு என்ன வயது என்றால் 51. 1975 ஆம் வருடம் எனக்கு 2 வயது தான் என்றால் சரிதான். எனது தந்தை 1975 ஆம் வருடத்தில் 1979 வருடம் வரை வழக்கு ஏ அட்டவணை சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. எனது முதன்மை சாட்சியத்தின் ஏ அட்டவணை வழக்கு சொத்துக்களை எனது தந்தை பெயரில் கூட்டு குடும்பமாக கிரையம் பெற்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் நான் அதுபோல் தெரிவிக்கவில்லை. 1979 ஆம் வருடம் என்னால் கிரையம் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

3. 23.02.2007ஆம் தேதி நானும் எனது தம்பியும் பாக ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் சரிதான். அந்த 23.08.2007 தேதியிட்ட ஏன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணம் என்னிடம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் பதிவு செய்யப்பட்ட நகலை வாங்கி தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் எனக்கு தெரியாது என்பதால் தாக்கல் செய்யவில்லை.

4. 21.03.2011 ஆம் தேதி நானும், 2வது பிரதிவாதியும் பாக ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் சரிதான். அந்த என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணம் சான்றிட்ட நகல் இல்லை என்றால் அசல் ஆவணம் இல்லை என்பதால் கலர் ஜெராக்ஸ் ஆவணத்தைக் கொடுத்தேன். நான் பாக ஆவணத்தின் அசலை வைத்துக்கொண்டு வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1975 ஆம் வருடம் நான் எனது தந்தையுடன் கூட்டு குடும்ப உறுப்பினராக இல்லை என்றால் சின்ன குழந்தையாக இருந்தேன்.

5. எந்த பஞ்சாயத்தார் முன்னிலையில் பாக ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் ஏற்படுத்திக்கொண்டேன். வாதிகள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். வாதிகளுக்கு எந்த சர்வே நம்பரில் சொத்தை செட்டில்மெண்ட் செய்து கொடுத்தேன் என்றால் இலுப்பைதண்டலம் சர்வே எண் 64/2சி சொத்தை செட்டில்மெண்ட் செய்துக்கொடுத்தேன். செட்டில்மெண்ட்டை பதிவு செய்தேனா என்றால் இல்லை. வாதிகளுக்கு நான் சொத்து எதையும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது பெற்றோர் தான் அவர்களது வருமானத்தில் கிரையம் பெற்றார்கள் என்றால் எனது தந்தையின் வருமானத்தில் அவரது பெயரில் கிரையம் பெறப்பட்டது.

6. வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கும் கூட்டு உரிமையார் என்ற முறையில் உரிமை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு கிடைக்க கூடியது என்றாலும் வழக்கு தாவாபடி தீர்ப்பு செய்யவேண்டும் என்றால் தற்போது சொத்து என்னிடம் இல்லை. நான் ஏற்படுத்திக்கொண்ட 2 பாக ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.